# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.217/2022

Deposition of witness – PW16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாக்கியராஜ் | Caste | : | |
| S/o. | : | ராஜேந்திரன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 19.02.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் தற்போது பூலாம்பட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 06.03.2022ம் தேதி தேவூர் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது தேவூர் காவல்நிலைய குற்ற எண்.21/2022 இதச 302 வழக்கில் காவல் ஆய்வாளருக்கு உதவியாக காவல் ஆய்வாளர் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளை விசாரணை செய்து அவர்கள் சொன்ன வாக்குமூலத்தை என்னிடம் சொல்லச்சொல்ல நான் வைத்திருந்த

மடிக்கணினியில் தட்டச்சு செய்து பிரிண்ட் எடுத்து கொடுத்தேன். அதன் பின்னர் காவல் ஆய்வாளரின் உத்தரவுப்படி சம்பவ இடத்தை எனது செல்போனில் போட்டோ எடுத்து மாவட்ட காவல் அலுவலகத்தில் உள்ள போட்டோ பிரிவில் பிரிண்ட் போட்டு கொடுத்தேன். காவல் ஆய்வாளர் இது குறித்து என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

05.03.2022ம் தேதி அல்லது 06.03.2022ம் தேதி காவல் ஆய்வாளர் காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. ஆய்வாளர் வரும்போது காவல்நிலையத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் ஞாபகமில்லை. அன்று இரவு தேவூர் காவல்நிலையத்தில் இரவு பணியில் யார் யார் இருந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. ஆய்வாளருடன் சம்பவ இடத்திற்கு யார் யார் சென்றோம் என்றால் ஆய்வாளருடன் நான் மட்டும் இருந்தேன். தேவூர் காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடம் எத்தனை கிலோமீட்டரில் உள்ளது எந்த திசையில் உள்ளது என்றால் சம்பவ இடம் 4 கிலோமீட்டர் தூரத்தில் வடக்கு திசையில் உள்ளது. சம்பவ இடத்தில் எவ்வளவு பேர் கூட்டமாக இருந்தார்கள் என்றால் சுமார் 10 பேர்கள் இருந்தார்கள்.

சம்பவ இடத்தில் ஆய்வாளர் யார் யாரை விசாரித்தார் என்றால் தற்போது ஞாபகமில்லை, ஆனால் நிறைய பேர்களை விசாரித்தார். சாட்சிகளின் சாட்சியங்களை ஆய்வாளர் சொல்லச்சொல்ல நான் மடிக்கணினியில் தட்டச்சு செய்தேன் என்றால் சரி. ஆய்வாளரின்

உத்தரவுப்படி எனது செல்போனில் சம்பவ இடத்தை எத்தனை போட்டோ எடுத்தேன் என்றால் 3 போட்டோக்கள் எடுத்தேன். எத்தனை போட்டோக்களை பிரிண்ட் எடுத்து ஆய்வாளரிடம் கொடுத்தேன் என்றால் 3 போட்டோக்களை 3 செட் பிரிண்ட் எடுத்து கொடுத்தேன். சம்பவ இடத்திற்கு நான் எத்தனை மணிக்கு போனேன், பொதுமக்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் அதிகாலை 1.15 மணிக்கு சென்றேன், பொது மக்கள் நிறைய பேர் இருந்தார்கள். சம்பவ இடத்திலிருந்து ஆய்வாளர் விசாரணை முடித்து எத்தனை மணிக்கு கிளம்பினார் என்றால் சரியாக நினைவில்லை.

மறுபடியும் நான் எங்கெல்லாம் சென்றேன் என்றால் நான் காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டேன். விசாரணை முடித்து என்னை ஆய்வாளர் எத்தனை மணிக்கு பணியிலிருந்து விடுவித்தார் என்றால் ஞாபகமில்லை. ஆய்வாளர் என்னிடம் சொன்ன சாட்சியங்களை எங்கே வைத்து பிரிண்ட் எடுத்தேன் என்றால்காவல் ஆய்வாளரின் வாகனத்தில் இருந்த பிரிண்டர் மூலம் பிரிண்ட் எடுத்துகொடுத்தேன். நான் பிரிண்ட் எடுத்து கொடுத்ததில் ஆய்வாளர் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றாரா என்றால் எனக்குத் தெரியாது. எந்தெந்த சாட்சிகளை எந்த தேதிகளில் எந்த இடத்தில் ஆய்வாளர் விசாரித்தார் என்றால் தற்போது நினைவில்லை. ஆய்வாளர் விசாரணை செய்து சொன்ன சாட்சியங்களை நான் உடனிருந்து மடிக்கணினியில் தட்டச்சு செய்து கொடுத்து பிரிண்ட் எடுத்து கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அவ்வாறு இருந்திருந்தால் எந்த சாட்சிகளை எந்த தேதியில் ஆய்வாளர் விசாரித்தார் என்று நான் கூறியிருப்பேன் என்றால் சரியல்ல.

சாட்சிகளின் வாக்குமூலங்களை நான் சொன்னவாறு சம்பவ இடத்தில் பதிவு செய்யவில்லை என்றும் அவற்றை காவல்நிலையத்தில் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.